## தி.மு.க. ஆட்சியில் விரிவடைந்த அறிவுலகம்!

# தமிழ்நாட்டின் நூலகப்புரட்சி - ஒரு வரலாற்றுப் பார்வை!

## தலைமுறைகளை உயர்த்திய கட்டமைப்பு!

ஒரு புத்தகம், ஒருவரின் வாழ்க்கையை மாற்றலாம்; ஒரு நூலகம், ஒரு தலைமுறையின் எதிர்காலத்தையே மாற்றும். பள்ளியை தாண்டி கற்கும் வாய்ப்பை வழங்கும் பொது நூலகங்கள், ஏழை எளிய மக்களின் அறிவுக் கதவுகளைத் திறக்கும் திறவுகோல்கள். தமிழ்நாட்டில் கிராம ஊராட்சிகள் தொடங்கி மாநகரங்கள் வரை இந்த அறிவுத் திறவுகோல்களை விரிவுபடுத்துவதில் தி.மு.க. ஆட்சிக் காலங்களில் முன்னெடுக்கப்பட்ட திட்டங்கள் தனித்த கவனம் பெறுகின்றன.

ஒரு காலத்தில் பாடப்புத்தகங்களே பல மாணவர்களுக்கு அறிவின் எல்லையாக இருந்தன. வீட்டில் தனி அறை இல்லை; படிக்க அமைதியான சூழல் இல்லை; போட்டித் தேர்வுகளுக்கான விலை உயர்ந்த நூல்களை வாங்க வசதியில்லை. ஆனால், ஊரின் ஒரு மூலையில் செயல்படும் சிறிய நூலகம், அத்தகைய மாணவர்களுக்குப் புதிய வாய்ப்புகளைத் திறக்க முடியும்.

நாளிதழ்களை வாசிக்கும் பழக்கத்தில் தொடங்கி, உலக அரசியல், அறிவியல், வரலாறு, இலக்கியம், பொருளாதாரம் எனப் பல துறைகளில் அறிவை பெறுவதற்கான பாதைகள் வகுத்தவை நூலகங்கள் தான். இது புத்தகங்களை அடுக்கி வைக்கும் கட்டிடம் அல்ல, அறிவார்ந்த சமூகத்தை உருவாக்குவதற்கான ஜனநாயக கட்டமைப்பு. இதையெல்லாம் கருத்தில் கொண்டு தான், கலைஞர் முதல்வராக இருந்தபோது 1972ம் ஆண்டில் நூலகத் துறைக்கு என தனியாக பொது நூலக இயக்குநரகத்தை உருவாக்கினார்.

இந்தப் பின்னணியில், தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சிக் காலங்களில் முன்னெடுக்கப்பட்ட கிராம நூலகத் திட்டங்கள், சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகம், மதுரை கலைஞர் நூற்றாண்டு நூலகம் போன்ற பெரிய திட்டங்களை ஒருங்கிணைத்துப் பார்க்க வேண்டியது அவசியம். நூலகங்கள் என்பவை நகரங்களோடு நின்று விடாமல், புத்தக வாசிப்பை கிராமங்கள் வரை கொண்டு செல்வதற்காக அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் 12,618 கிராமப்புற நூலகங்கள் அமைக்கப்பட்டது 2006 முதல் 2011 வரையிலான கலைஞர் தலைமையிலான தி.மு.க. ஆட்சியில் தான்.

கிராம ஊராட்சிகளில் நூலகங்கள் அமைக்கப்படும்போது, பள்ளி மாணவர்கள் பாடங்களுக்கு அப்பாற்பட்ட நூல்களை வாசிக்கலாம். நாளிதழ்கள் மூலம் நடப்பு நிகழ்வுகளைத் தெரிந்துகொள்ளலாம். அரசு வேலைவாய்ப்புகளுக்குத் தயாராகும் இளைஞர்களுக்கு மட்டுமின்றி அனைத்து தரப்பினரும் பொதுவான மற்றும் துறை சார்ந்த தகவல்களை தெரிந்து கொள்ள முடியும். ஏராளமான இலக்கியப் படைப்புகளை படிக்கவும் வாய்ப்புகள் உள்ளன.

நூலகங்களை உருவாக்குவது அறிவார்ந்த சமூக கட்டமைப்புக்கான ஒரு அரிய பணி. அதை விட முக்கியம் ஏற்கெனவே உருவாக்கப்பட்ட நூலகங்கள் பயன்பாடின்றி முடங்கிவிடாமல் பாதுகாப்பது. அ.தி.மு.க. ஆட்சியின்போது, கிராம அளவிலான பல நூலகங்கள் முறையான பராமரிப்பு இன்றியும், புதிய போதுமான புத்தகங்கள் இல்லாததாலும் முழு பயன் அளிக்கவில்லை. சரியாக செயல்படவில்லை என்ற குற்றச்சாட்டுகள் கூறப்பட்டன.

ஆனால், மு.க.ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. ஆட்சியில், 2021 - 22ல் 4,116 நூலகங்கள் ரூ.91.75 கோடியில் புதுப்பிக்கப்பட்டன. இதுபோல், 2022 - 23 நிதியாண்டில் ரூ.84.27 கோடியில் 3,679 நூலகங்கள் 2024 - 25ல் ரூ. 96.84 கோடியில் 4,386 நூலகங்கள் புதுப்பிக்க வகை செய்யப்பட்டது. இதுபோல் நகரங்களில் உள்ள பெரிய நூலகங்கள் ஆய்வு, உயர்கல்வி, போட்டித் தேர்வு தயாரிப்பு, பல்துறை வாசிப்பு ஆகியவற்றுக்கான விரிவான வசதிகளையும் வாய்ப்புகளையும் வழங்குகின்றன.

சென்னையில் அமைந்துள்ள அண்ணா நூற்றாண்டு நூலகம் இதற்கு முக்கியமான எடுத்துக்காட்டு. அறிஞர் அண்ணா நூற்றாண்டை முன்னிட்டு கலைஞர் ஆட்சியில் அண்ணா நூற்றாண்டு நூலகம் ரூ.178.78 கோடி செலவில் அமைக்கப்பட்டு, 2010 செப்டம்பர் 15-ல் திறக்கப்பட்டது. இன்றளவும் மாணவர்கள், ஆய்வாளர்கள் பலரின் அறிவுப்பசியை தீர்ப்பதில் முக்கியப் பங்கு வகிக்கிறது.



சென்னையை மையமாகக் கொண்டிருந்த பெரிய நூலக வசதிகளைத் தாண்டி, தென் தமிழ்நாட்டிலும் நவீன நூலகக் கட்டமைப்பை உருவாக்கும் முயற்சியாக மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நூலகம் 3.8 ஏக்கர் பரப்பளவில் 2.16 லட்சம் சதுர அடியில் நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்டது. 6 மாடி கொண்ட இந்த பிரமாண்ட நூலகத்தில் 3.64 லட்சம் புத்தகங்கள் உள்ளன. தென் மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள் உள்ளிட்டோருக்கு பல்வேறு பாடப்பிரிவுகளில் நூல்களை அணுகும் வாய்ப்பை ஏற்படுத்த உருவாக்கப்பட்ட நூலகம் இது.

இதைத் தொடர்ந்து கோவையில் பிரமாண்ட நூலகம் அமைக்க திட்டமிடப்பட்டு இதற்கான அறிவிப்பு 2024 - 25 பட்ஜெட் உரையில் வெளியிடப்பட்டது. 2024 நவம்பரில் நூலகத்துக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. ஏறக்குறைய 1.98 லட்சம் சதுர அடியில் நூலகம் ரூ.301.71 கோடி செலவில் கட்டப்பட்டது. இதனைத்தான் தற்போதைய முதல்வர் விஜய் திறந்து வைத்துள்ளார்.

இவ்வளவு ஏன், திருச்சியில் காமராஜர் நூலகம், நெல்லையில் காயிதே மில்லத் நூலகம், சேலத்தில் பாரதிதாசன் அறிவுலகம், கடலூரில் அஞ்சலை அம்மாள் அறிவுலகம் என தலைமுறை கடந்தும் பலன் அளிக்கக்கூடிய அறிவார்ந்த சமுதாயத்தை உருவாக்க தி.மு.க. ஆட்சியில் நூலகங்கள் கட்டமைக்கப்பட்டன. பசிப்பவருக்கு மீன் கொடுப்பதை விட மீன் பிடிக்க கற்றுத் தருவது அவரது வாழ்நாள் தேவையை பூர்த்தி செய்யக் கூடியதோ அப்படித்தான், தி.மு.க. ஆட்சில் கட்டப்பட்ட நூலகங்கள்.

கலைஞர், மு.க.ஸ்டாலின் என அடுத்தடுத்து தி.மு.க. ஆட்சியில் மட்டும் மொத்தம் 12,614 நூலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதற்கு முந்தைய காங்கிரஸ் ஆட்சியில் 1,361நூலகங்கள் மட்டுமே அமைந்தன. அ.தி.மு.க. ஆட்சியில் 2,590 நூலகங்கள் அமைக்கப்பட்டதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. இப்படி குறைந்த காலமே ஆட்சியில் இருந்தபோதும் அறிவார்ந்த சமுதாயத்தை கட்டமைப்பதில் தி.மு.க. ஆட்சியில் முக்கியத்துவம் வழங்கப்பட்டதுதான் நூலகப் புரட்சிக்கு காரணம்.

நூலகத்தின் வெற்றி, அதன் கதவுகளைத் திறந்து உள்ளே வரும் வாசகர்களின் எண்ணிக்கையிலும், அங்கிருந்து அறிவைப் பெற்று வெளியேறும் தலைமுறைகளிலும் இருக்கிறது. அத்தகைய அறிவார்ந்த தலைமுறையை உருவாக்க நூலகங்கள் மூலம் அடித்தளமிட்ட தி.மு.க. ஆட்சிக் காலங்கள், காலங்கள் கடந்தும் அறிவு பெட்டக வாயிலுக்கான சாட்சியாக இருக்கின்றன என்கின்றனர் இந்த நூலகங்களால் பயன்பெற்ற அறிஞர்கள், ஆர்வலர்கள்.




* தி.மு.க. ஆட்சியில் புதுப்பிக்கப்பட்ட நூலகங்கள்

* 2021 - 22 4,116 நூலகங்கள் திட்டச் செலவு ரூ. 91.75 கோடி

* 2022 - 23 3,679 நூலகங்கள் திட்டச்செலவு ரூ.84.27 கோடி

* 2024 - 25 4,386 நூலகங்கள் திட்டச் செலவு ரூ.96.84 கோடி

* தமிழகத்தின் நூலகப் பாரம்பரியம்

* ஆசியாவின் தொன்மையான நூலகங்களில் ஒன்றாக கருதப்படுவது, தஞ்சை சரஸ்வதி மகால் நூலகம். 600 ஆண்டுகளுக்கு முன்பு சோழர் காலத்தில் அமைக்கப்பட்டது. பின்னர் தஞ்சையை ஆண்ட நாயக்கர், மராட்டியர்கள் ஆட்சியிலும் வளர்ச்சியடைந்தது.

* சென்னையில் உள்ள கன்னிமாரா பொது நூலகம், நாட்டின் தேசிய வைப்பு நூலகங்களில் ஒன்றாக திகழ்கிறது.

* உ.வே.சா. நூலகம், சென்னை: டாக்டர் உ.வே.சாமிநாத ஐயரின் இலக்கிய பாரம்பரியத்தை பாதுகாக்கும் இந்நூலகம், அரிய கையெழுத்து பிரதிகள் மற்றும் அறிய வெளியீடுகளை கொண்டு, இலக்கிய ஆய்வுகளுக்கு உறுதுணையாக உள்ளது.

* மறைமலையடிகள் நூலகம், சென்னை: தமிழ் நூல்கள் மற்றும் ஆராய்ச்சி வெளியீடுகளின் தொகுப்புகள் இங்கு உள்ளன.

* ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம், சென்னை: பன்னாட்டு அளவில் அங்கீகாரம் பெற்றது இது.




**அறிவியல் ஆர்வலர்களுக்கு தொழில் நுட்ப மையங்கள்!**

தமிழ்நாட்டில் நகர்ப்புற மற்றும் கிராமப்புற பகுதிகளில் பொதுமக்களிடம் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தை பரப்புதல், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் மற்றும் அறிவியல் ஆர்வலர்கள் அறிவியல் அறிவை மேம்படுத்தவும் ஆய்வில் ஈடுபடுவோர் பலன் பெறும் வகையிலும் தமிழ்நாடு அறிவியல் இலக்கிய பாரம்பரியத்தை பாதுகாக்கும் இந்நூலகம், அரிய கையெழுத்து பிரதிகள் மற்றும் அறிய வெளியீடுகளை கொண்டு, இலக்கிய ஆய்வுகளுக்கு உறுதுணையாக உள்ளது.

* மறைமலையடிகள் நூலகம், சென்னை: தமிழ் நூல்கள் மற்றும் ஆராய்ச்சி வெளியீடுகளின் தொகுப்புகள் இங்கு உள்ளன.

* ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம், சென்னை: பன்னாட்டு அளவில் அங்கீகாரம் பெற்றது இது.

**தி.மு.க. ஆட்சியில் எதிலும் முதல் மாநிலம்! இதிலும் முதல் மாநிலம்!**

கல்வி, தொழில்துறை என துறைதோறும் புதுமைகள், அறிமுகங்கள் பெரும்பாலும் தமிழ்நாட்டில் நிகழ்ந்திருக்கின்றன. இந்த வகையில் சுதந்திர இந்தியாவில் முதன் முதலாக பொது நூலகச் சட்டம் 1950ம் ஆண்டு ஏப்ரல் 1ஆம் தேதி இயற்றப்பட்டது.

இதன்பிறகுதான், ஆந்திரா 1960, கர்நாடகா 1965, மகாராஷ்டிரா 1967, மேற்கு வங்கம் 1979, மணிப்பூர் 1988, கேரளம் 1989 என அடுத்தடுத்த ஆண்டுகளில் கொண்டுவரப்பட்டன. இன்னும் கல்வியில் பின்தங்கிய மாநிலமாக உள்ள சில மாநிலங்களான குஜராத் 2000, உத்தரபிரதேசம் 2005, பீகார் 2007, அருணாசல பிரதேசம் 2009ம் ஆண்டுகளில் இந்த சட்டத்தை அமல்படுத்தியுள்ளன.

**அறிவியல் ஆர்வலர்களுக்கு தொழில் நுட்ப மையங்கள்!**

தமிழ்நாட்டில் நகர்ப்புற மற்றும் கிராமப்புற பகுதிகளில் பொதுமக்களிடம் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தை பரப்புதல், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் மற்றும் அறிவியல் ஆர்வலர்கள் அறிவியல் அறிவை மேம்படுத்தவும் ஆய்வில் ஈடுபடுவோர் பலன் பெறும் வகையிலும் தமிழ்நாடு அறிவியல் தொழில் நுட்ப மையங்கள் ஏற்படுத்தப்பட்டன. மாணவர்கள் மற்றும் அறிவியல் ஆர்வலர்களுக்காக தி.மு.க. ஆட்சியில் அமைக்கப்பட்ட அறிவியல் தொழில் நுட்ப மையங்கள் வருமாறு:

**சட்டங்கள் மற்றும் நடைமுறைகள்!**

தமிழ்நாட்டில் முதன் முதலாக பொது நூலகங்களை நிறுவுவதற்கும், நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறங்களில் நூலகச் சேவையை ஒருங்கிணைப்பதற்கும் தமிழ்நாடு பொது நூலகச் சட்டம், 1948 இயற்றப்பட்டது. பின்னர், 1972ம் ஆண்டு தனி பொது நூலக இயக்கம் உருவாக்கப்பட்டதன் மூலம் நூலக நிர்வாகம் தனித்த அமைப்பின் கீழ் கொண்டுவரப்பட்டது.

இதன்பிறகு 1982ம் ஆண்டு மே 3ம் தேதி பிறப்பிக்கப்பட்ட அரசாணை மூலம், உள்ளாட்சி நூலக ஆணைய ஊழியர்களின் பணிகளை அரசுப் பணியாக மாற்றும் நடவடிக்கை 1982 ஏப்ரல் 1 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது. 1996ல் வெளியிடப்பட்ட அரசாணையில், தமிழ்நாட்டில் 625 ஊர்ப்புற நூலகங்களைத் தொடங்க அரசு அனுமதி அளித்தது.

நன்றி: **தினகரன்** 22.10.2026

---

### த.வெ.க. மாவட்டச் செயலாளர் அரசு அலுவலகக் கட்டிடத்தை திறந்து வைத்த சம்பவம் :

# பொதுமக்கள் - சமூக ஆர்வலர்கள் மத்தியில் பெரும் சர்ச்சை!

*ரிஷிவந்தியம், அக்.23:* கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியத்தில் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் ஏற்படுத்த வேண்டும் என அந்தப் பகுதி பொதுமக்கள் கடந்த 60 ஆண்டு காலமாக கோரிக்கை வைத்திருந்த நிலையில், கடந்த ஐந்து வருடமாக நமது திராவிட மாடல் நல்லாட்சி நடைபெற்றுக் கொண்டிருந்த போது ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயனிடம் பொதுமக்கள் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அமைத்துத் தர வேண்டும் என கோரிக்கை வைத்திருந்தனர். பல ஆண்டுகளாக பொதுமக்கள் வைத்திருந்த கோரிக்கையை நிறைவேற்ற முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்ற திராவிட மாடல் நல்லாட்சியில், பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்த எ.வ.வேலுவின் கவனத்திற்கு கொண்டு சென்று வலியுறுத்தினார்,

60 ஆண்டு கால கோரிக்கையை ஏற்று, ரூ.6.50 கோடி மதிப்பீட்டில் ரிஷிவந்தியத்தில் புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அமைக்க 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ரிஷிவந்தியம் ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து 22 கிராம ஊராட்சிகள் உள்ளடக்கிய ரிஷி வந்தியம் ஒன்றியமும், அதேபோல் 38 கிராம ஊராட்சி கள் உள்ளடக்கிய வானாபுரம் புதிய ஒன்றியமும் உருவாக்கி தமிழ்நாடு அரசு அதிகாரப் பூர்வமாக அரசாணை வெளியிடப்பட்டது, மேலும் இப் புதியை ஒன்றியங்களில் செயலாக்கம் அக்டோபர் 20 முதல் அமலுக்கு வரும் என்றும் அறிவிக்கப்பட்டது,

அந்த வகையில் அரசின் அறிவிப்பின்படி புதிய கட்டிடம் கட்டி முடிக்கப்படும் வரை பொதுமக்களின் வசதிக்காக ரிஷிவந்தியத்தில் உள்ள சமுதாயக் கூடத்தில் தற்காலிக ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அமைக்கப்பட்டது. இதன் திறப்பு விழா அக்டோபர் 21 புதன் கிழமை அன்று அனைத்துக் கட்சிகளை சேர்ந்த முக்கிய நிர்வாகிகள், அரசு அதிகாரிகள், முன்னாள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், பொது மக்கள் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னிலையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

**கழகத் தலைவருக்கு பொதுமக்கள் நன்றி!**

நிகழ்ச்சியில் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., தற்காலிக ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டிடத்தை திறந்து வைத்து, அனைவருக்கும் நன்றி தெரிவித்து சிறப்புரை ஆற்றிய பிறகு அங்கிருந்து புறப்பட்டார்.

60 ஆண்டு கால கோரிக்கையை விரைந்து நிறைவேற்ற நடவடிக்கை எடுத்த திராவிட மாடல் நாயகர், சமூக நீதிக் காவலர், கழகத் தலைவர், முன்னாள் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், கழக இளைஞரணி செயலாளர், முன்னாள் தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு, வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. ஆகியோர்களுக்கு அப்பகுதி மக்கள் நன்றியை தெரிவித்துக் கொண்டனர்.

இதனை தொடர்ந்து சிறிது நேரத்திற்குப் பின் த.வெ.க., மாவட்டச் செயலாளர் பரணி பாலாஜி தனது ஆதரவாளர்களுடன் வந்து கட்டிடத்தை பார்வையிட்டு திறந்து வைத்தார்.

**பொதுமக்கள் அதிர்ச்சி!**

தமிழக வெற்றிக் கழக நிர்வாகிகளுக்கு கட்சியின் தலைமை அறிவிப்பின்படி கட்சி நிர்வாகிகள் யாரும் எந்த ஒரு அரசு நிகழ்ச்சியிலும் கலந்து கொள்ளக் கூடாது மற்றும் அரசு அலுவலகங்களில் ஆய்விற்கு செல்லக்கூடாது என தெரிவித்தும் அதனை மதிக்காமல் நேற்று முன்தினம் நடைபெற்ற தற்காலிக வட்டார வளர்ச்சி அலுவலக கட்டிட திறப்பு விழாவில் எந்த ஒரு அரசுப் பதவியிலும் இல்லாத மாவட்டச் செயலாளர் பரணி பாலாஜி அலுவலகத்தை திறந்து வைத்த சம்பவம் பொதுமக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது, நாளுக்கு நாள் தமிழக வெற்றிக் கழகத்தினர் இதுபோன்று சம்பவத்தில் ஈடுபடுவது தொடர் வாடிக்கையாக்கி உள்ளதால் பொது மக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது,

**பரணி பாலாஜி மக்கள் பிரதிநிதியா?**

மாவட்டச் செயலாளராக இருக்கும் பரணி பாலாஜி மந்திரியாக உள்ளாரா அல்லது எம்.எல்.ஏ.வாக உள்ளாரா இல்லை மக்கள் பிரதிநிதியாக உள்ளாரா என பொதுமக்கள் மத்தியில் கேள்வியும் எழுந்து உள்ளது. அந்த தொகுதிக்கு அவர் என்ன சட்டமன்ற உறுப்பினரா உள்ளாட்சி பிரதிநிதியா என சமூக ஆர்வலர்களும் பொதுமக்களும் கேள்வி எழுப்பி வரும் சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி வருகிறது, திராவிட மாடல் நல்லாட்சியில் கொண்டுவரப் பட்ட பல்வேறு எண்ணற்ற மக்கள் நல திட்டங்களுக்கு வெற்றி (வெத்து ) ஸ்டிக்கர் ஒட்டி பெயர் எடுத்து வரும் சோபா மாடல் அரசு இது சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது. ரீல்ஸ் முதல்வர் ஜோசப் விஜய் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார் என்றும் பொது மக்களும் சமூக ஆர்வலர்களும் மிகுந்த எதிர்பார்ப்பில் உள்ளனர்.




சென்னை எழும்பூர் ராஜரத்தினம் மைதானம் அருகே தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பதவி விலக வலியுறுத்தி, இடதுசாரி மாணவர்கள் கூட்டமைப்பு சார்பில் 24 மணி நேர காத்திருப்பு போராட்டம்! போலீசார் அனுமதி மறுத்துள்ள நிலையில், போராட்டக்காரர்களை கைது செய்ய காவலர்கள் குவிக்கப்பட்டுள்ளனர்.